**செய்தி வெளியீடு எண்: 91/2024** **நாள்: 03.12.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**எழும்பூர் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காக கூடுதல் நுழைவுவாயில் திறக்கப்பட்டுள்ளது**

எழும்பூர் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையங்களில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டுகள் போன்ற வசதிகளுடன் கூடுதல் நுழைவுவாயில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நுழைவு வாயிலை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை ஆலோசகர் திரு. கோபிநாத் மல்லையா (பராமரிப்பு மற்றும் இயக்கம்), அவர்கள் 02.12.2024 அன்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார். இந்த நுழைவுவாயில் 02.12.2024 முதல் பயணிகளின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**